Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 31 2025

திங்கட்கிழமை 31, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர் 190 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## டிரானுக்கு சி.ஐ.டி அழைப்பு



முன்னாள் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மணிக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு, திங்கட்கிழமை (01) காலை 10 மணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை வெலிகமவில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் 2023ஆம் ஆண்டு நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த ஒரு பொலிஸ் சார்ஜென்ட் இறந்தது தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக அவர் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## தமிழ்மிரர் வாசகர்களுக்கு ஈத் முபாரக்

உலகவாழ் முஸ்லிம்கள், தங்களுடைய நோன்பு பெருநாளை, இன்று (31) கொண்டாடுகின்றனர். தமிழ்மிரர் வாசகர்களுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.





"மறுமலர்ச்சி யுகத்திற்கான எதிர்பார்ப்புகள் நிறைவேறும்"

"சுபிட்சத்திற்கான செய்தியை கொண்டு வரட்டும்"





"ஒன்றிணைந்து சுபிட்சத்தை நோக்கி முன்னேறுவோம்"

## "ஸ்டிக்கர் ஒட்டியவர் தீவிரவாத நபர்"

PMD Police Media Division SRI LANKA POLICE

கொழும்பில் உள்ள ஒரு பல்பொருள் அங்காடியில் பணிபுரிந்த 22 வயது இளைஞர் ஒருவர், 22/03/2025 அன்று கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சமூக ஊடகங்களில் ஒரு குழுவினர் தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர் என்று இலங்கை பொலிஸ் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் பரவும் தகவல்கள் துல்லியமானவை அல்ல, மேலும், சமூகத்தில் தவறான தகவல்கள் பரவுவதைத் தடுப்பது இலங்கை காவல்துறையின் பொறுப்பாகும்.

இந்த ஸ்டிக்கர் ஒட்டுவது தொடர்பாக கிடைத்த தகவலின் அடிப்படையில், இலங்கை பொலிஸ்துறை விசாரணையைத் தொடங்கியது. இந்தச் செயலைச் செய்த இளைஞன் குறித்து விசாரணையின் போது, வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அவர் ஒரு ஸ்டிக்கர் ஒட்டுவதைத் தாண்டிச் சென்ற ஒரு தீவிரவாத நபர் என்பது தெரியவந்தது.

மேலும், விசாரணையின் போது, வெளிப்படுத்தப்பட்ட பிற முக்கிய தகவல்களின் அடிப்படையில், அவர் ஏதோ ஒரு வகையில் பயங்கரவாதச் செயலைச் செய்யத் தயாராக உள்ள ஒரு நபர் என்ற நியாயமான சந்தேகத்தின் பேரில் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சந்தேக நபரின் நடவடிக்கைகள் குறித்து நீண்ட விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளின் அடிப்படையில், அவர் இணையம் மற்றும் பிற முறைகளைப் பயன்படுத்துவதால் சில உளவியல் உந்துதல்களுக்கு ஆளானவர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், அந்த மனநிலையின் அடிப்படையில் மத தீவிரவாத செயலைச் செய்வதற்கான அவரது உணர்திறன் குறித்து மேலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த சந்தேக நபருக்குச் சொந்தமான கணினி வன்பொருள், தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் அலைபேசிகள் குறித்து தடயவியல் விசாரணைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## "மோடியின் வருகை இராஜதந்திர வெற்றி"

கனகராசா சரவணன்மி



கக் குறுகிய காலத்தில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் அனுசரணையைப் பெற்றுக் கொண்டு இராஜதந்திர ரீதியாக மிகவும் ஒரு சக்தி வாய்ந்த நாடாக உருவெடுத்து வந்துள்ளோம். இந்த வெற்றியின் முதற்படியாக எமது நாட்டிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விஜயம் மேற்கொள்ளவுள்ளதை முக்கியமான விடயமாகப் பார்க்கின்றோம், அவரின் வருகையின் பின்னர் ஏனைய நாட்டுத் தலைவர்களும் வர இருக்கின்றனர் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மியான்மரில் பின் அதிர்வால் மக்கள் பீதி



மியன்மாரில் வெள்ளிக்கிழமை காலை 11.50 மணிக்கு 7.7 ரிக்டர் அளவில் தாக்கிய சக்தி வாய்ந்த பூகம்பத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,644 ஆக அதிகரித்துள்ளது. அதன் அண்டை நாடான தாய்லாந்தில் 17 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூகம்பத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட மாண்டலே நகரில் ஞாயிற்றுக்கிழமை (30) தாக்கிய பின்னர் அதிர்வுகளால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

முதலில் லேசாகத் தொடங்கிய அதிர்வு, பின்னர் 6.7 ரிக்டர் அளவில் தீவிரமடைந்தது.

அதேபோல, காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 3,408 ஆகவும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 139 ஆகவும் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2



முஸ்லிம் பாடசாலைகளுக்கு

## நாளை விடுமுறை

நோன்புப் பெருநாளை யொட்டி, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் ஏப்ரல் 1ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

நோன்புப் பெருநாளுக்காக திங்கட்கிழமை (31) ஏற்கெனவே விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை 1ஆம் திகதியும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பதில் கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## மர்ம நபரின் அழைப்பால் பெரும் பரபரப்பு



கனகராசா சரவணன்

கடமையில் இருந்த பெண் வைத்தியர்களைக் குறிவைத்து, மர்ம நபர் ஒருவர், தொலைபேசி ஊடாக அநாகரிகமான வார்த்தைகளால் பேசி, அவர்களைக் குழப்பமடைய வைத்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (30) அதிகாலையில் இடம் பெற்றுள்ளதையடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

## "முன்னாள் ஜனாதிபதிகளுக்கு தடையை விதிக்கவும்"

க.அகரன்


போர்க் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத் தடை விதித்துள்ளதை நாம் வரவேற்பதுடன், சில முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் இவ்வாறான தடைகள் விதிக்கப்பட வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா பழைய பேருந்து நிலைய பகுதிக்கு முன்பாக அவர்களால் ஞாயிற்றுக்கிழமை (30) முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.




தொடர்ச்சி P2

## பாராளுமன்ற ஊழியர்களின் கொடுப்பனவுக்கும் ஆப்பு



அனைத்து பாராளுமன்ற ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள், புதிய சம்பள திருத்தங்களின் கீழ் 70 சதவீதத்திலிருந்து 39 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் ஊழியர்கள் வலுவான தொழிற்சங்க நடவடிக்கையை எடுக்கத் தயாராகி வருவதாக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

## "உப்புசப்பற்ற இடப்பெயர் அல்ல"



பு.கஜிந்தன்

இலங்கையில் உப்பளங்களை நிர்வகித்து வருகின்ற தேசிய உப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனம் (National Salt Ltd) ஆனையிறவில் விளையும் உப்புக்கு ரஜலுனு (Rajalunu) என பெயரிட்டுள்ளது. இதுவரையில் 'ஆனையிறவு உப்பு' என விழிக்கப்பட்டு வந்த உப்பு, 'ரஜலுணு' என பெயரிடப்படும் அளவுக்கு, ஆனையிறவு ஒன்றும் உப்புசப்பற்ற இடப்பெயர் அல்ல. அது தமிழ் மக்களின் வரலாற்றில், வாழ்வியலில், பொருளியலில்,

தொடர்ச்சி P2

## "அடையாளப் பெயரை உறுதி செய்யவும்"

எஸ்.தில்லைநாதன்



ஆனையிறவு உப்பு என்னும் அடையாளப் பெயரை உறுதி செய்யுமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "வெகுவிரைவில் ஆனையிறவு உப்பு"

எஸ்.தில்லைநாதன்

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது ஆனையிறவு உப்பு என்ற பெயருடன் உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “மோடியின் வருகை இராஜதந்திர வெற்றி”

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் சனிக்கிழமை (29) அன்று பழைய கச்சேரி மண்டபத்தில் பிரதி அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது, மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் வெற்றிகரமாக இடம்பெற்றது. எது எவ்வாறாக இருந்தாலும், தேர்தல் விதிமுறை அமுலில் இருப்பதால் சில அபிவிருத்தி தொடர்பான விடயங்களைப் பற்றி தீர்மானம் எடுத்தோம். இதேவேளை, எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி மட்டக்களப்பில் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதுடன், கடந்த பாராளுமன்ற தேர்தலைவிட உள்ளூராட்சி சபையில் மட்டக்களப்பில் பாரிய வெற்றி பெறுவோம்.

கனிய வளத்தை (மண் அகழ்வு) பார்த்தால் கடந்த காலத்தில் அரசியல் ரீதியான தாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நான் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக வந்தவுடன், சில இடங்களில் சட்டவிரோத அகழ்வுகளை நிறுத்தினேன். இருந்த போதும், மண் கொள்கை என்ற அடிப்படையில், இந்த மண் அகழ்வைச் சரியான முறையில் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டுள்ளோம்..

இருந்த போதும், சில இடங்களில் முறைகேடுகள் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் வந்துள்ளது. ஆகவே, கடந்த 76 வருடங்கள் ஒரு சீர்குலைவுக்கு உட்படுத்தப்பட்ட நாட்டை தான் நாங்கள் பொறுப்பெடுத்துள்ளோம்.

அதன்படி, சட்டவிரோத மண் அகழ்விற்கு எதிராக குரல் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம். இதில், மகாவலி, நீர்பாசன விவசாயமும் வன பரிபாலன, கனிய வளம், சுற்றுச்சூழல் போன்ற திணைக்களங்களை ஒன்றுபடுத்தி ஒரு வெளிப்படைத் தன்மையிலான மண் கொள்கை ஒன்றை வகுத்து பொருத்தமான இடங்களை அடையாளம் கண்டு அதில் சரியானவர்களுக்கு அகழ்வதற்கு அனுமதி வழங்க துறை சார்ந்தவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்திய இராஜதந்திர ரீதியாக மிக நெருக்கமான நாடு, மிகவும் அண்மையில் இருக்கின்ற நாடு, தேசிய மக்கள் சக்தி தொடர்பாகவும் ஜனாதிபதி தொடர்பாகவும் எதிர் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட பிரபலமான விமர்சனம் தான் சர்வதேச ரீதியாக எந்தவிதமான கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாது.

அத்துடன், இந்தியா பகைக்கும் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் உதவிகள் கிடைக்காது என முன்வைக்கப்பட்ட அடிப்படை இல்லாத விமர்சனங்கள்.

ஆனால், இன்று மிகக்குறுகிய காலத்தில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளின் அனுசரணையைப் பெற்றுக் கொண்டு இராஜதந்திர ரீதியாக மிகவும் ஒரு சக்திவாய்ந்த நாடாக உருவெடுத்து வந்துள்ளோம். இந்த வெற்றியின் பின்னர், எமது நாட்டிற்கு முதலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விஜயம் மேற்கொள்ளவுள்ளதை முக்கியமான விடயமாகப் பார்க்கின்றோம்.

அதேவேளை, இந்தியாவுடன் சூரிய சக்தி மின்சாரம் தொடர்பாகக் கூட்டு ஒப்பந்தம் செய்யவுள்ளோம். அதுமட்டுமல்ல, இந்திய அரசின் பாரிய உதவி மூலம் கிழக்கு மாகாணத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன என்றார்.

# மர்ம நபரின் அழைப்பால் பெரும் பரபரப்பு

குறித்த வைத்தியசாலை தொலைபேசி அறைக்கு, சம்பவ தினமான ஞாயிற்றுக்கிழமை (30) அதிகாலை 2.00 மணிக்கு இனம் தெரியாத மர்ப நபர் ஒருவர், தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தி அங்குள்ள சில வாட்டுக்களுக்கு தொலைபேசி அழைப்பை மாற்றுமாறு கோரியுள்ளார். அந்த அழைப்புக்கள் மாற்றப்பட்டதையடுத்து, குறித்த மர்ம நபர் அங்கு கடமையில் இருக்கின்ற வாட் பொறுப்பாளர் மற்றும் பெண் வைத்தியர்களின் கையடக்க தொலைபேசிகளை பெற்று அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அநாகரிகமான முறையில் பேசியுள்ளார்

இவ்வாறு அதிகாலை 2.00 மணி தொடக்கம் காலை 6.00 மணிவரை 13 பேருடன் தொடர்பை ஏற்படுத்திக் குழப்பத்தை ஏற்படுத்தியதையடுத்து, அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட வைத்தியர்கள், பொறுப்பாளர்கள் வைத்தியசாலை பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

இதனையடுத்து, இது தொடர்பாக பொலிஸ் நிலையத்திலும் சைபர் கிரைம் பிரிவிலும் முறைப்பாடுகளைச் செய்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர்களை தொலைபேசி ஊடாக தொடர்பு ஏற்படுத்திய போதும் தொடர்பு கொள்ள முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# “வெகுவிரைவில் ஆனையிறவு உப்பு”

தேசிய உப்பு நிறுவனத்தின் ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலையில், மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (29) இடம்பெற்றது. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்த, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகரன் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு ஆனையிறவில் நடைபெற்றுள்ளது.

இதன்போது மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது தற்பொழுது ரஜ என்ற பெயரிலேயே வெளி வருகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்திலேயே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. உடனடியாக அந்த பெயரை மாற்ற முடியாது. அதற்கென நடைமுறைகள் உள்ளன. உடனடியாக நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகவே பழைய பெயரிலேயே விநியோகிக்கப்படுகின்றது.

வெகு விரைவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ஆனையிறவு உப்பளத்தின் பெயரிலேயே இலங்கையில் மட்டும் அல்ல. உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும். இது தொடர்பில் தமக்கு கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி உத்தரவாதம் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# “ஸ்டிக்கர் ஒட்டியவர் தீவிரவாத நபர்”

எதிர்வரும் காலங்களில், தீவின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சமூகங்களுக்கிடையில் தேசிய மற்றும் மத விழாக்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஏராளமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கண்ட கைதுகள் தொடர்பான தவறான கருத்துக்களை சமூக மயமாக்குவது நாட்டின் அமைதியிலும் தேசிய பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், பொய்யான பிரசாரங்களால் ஏமாறாமல், நாட்டின் அமைதியையும் பல்வேறு சமூகங்களுக்கிடையில் நிலவும் நல்லிணக்கத்தையும் பாதுகாக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இது தொடர்பான விசாரணைகள் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படும், விசாரணைகள் விரைவாக முடிக்கப்பட்டு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மியான்மரில் பின் அதிர்வால் மக்கள் பீதி

இது நகரில் வசிக்கும் சுமார் 1.7 மில்லியன் மக்களை மேலும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

பூகம்பத்தில் உயிர்பிழைத்திருப்பவர்கள் கட்டிட இடிபாடுகளுக்கு இடையில் சிக்கியிருப்பவர்களைத் தேடி வருகின்றனர்.

இந்தப் பேரழிவுகளுக்கு மத்தியில், மியன்மாரில் ராணுவ ஆட்சியை எதிர்த்துப் போராடி வரும் நிழல் தேசிய ஒற்றுமை அரசு (என்யுஜி) மீட்பு மற்றும் நிவாரண பணிகளை எளிதாக்கும் வகையில் நாட்டில் நடந்து வரும் உள்நாட்டுப் போரில் சில குறிப்பிட்ட பகுதியில் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

அதேபோல், மியன்மாரின் நிழல் தேசிய ஒற்றுமை அரசு. இந்தியா, சீனா மற்றும் ரஷ்யாவின் உதவியுடன் நிவாரண மீட்பு முயற்சிகளை எளிதாக்கும் வகையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை (30) முதல் இரண்டு வாரத்துக்குப் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

இதனிடையே திறம்படச் செயல்படுவதற்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் மியன்மாரில் இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில், இதுபோன்ற பேரழிவுகளை எதிர்கொள்ளும் வகையில், நாடு தயாராக இல்லை என்று சர்வதேச உதவி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

பூகம்பம் தாக்குவதற்கு முன்பு, மியன்மார் உள்நாட்டுப் போர் பாதிப்பில் சிக்கியிருந்தது.

இந்த உள்நாட்டுப் போர் 3.5 இலட்சம் மக்களை இடம்பெயரச் செய்ததுடன் பலரைப் பட்டினியில் வாடும் நிலைக்குத் தள்ளியிருந்தது.

அண்டை நாடான தாய்லாந்தின் பேங்கொகில் கட்டுமானத்தில் இருந்த வானுயர்ந்த 30 மாடி கட்டிடம் இடிந்து விழுந்தது. இதில் குறைந்தது 17 பேர் உயிரிழந்துள்ளனர், 32 பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும் 83 பேரைக் காணவில்லை. இடிபாடுகளில் யாராவது உயிருடன் இருக்கின்றனரா? என்பதைக் கண்டறிய மீட்டுபுக்குழுவனர் அகழாய்வு இயந்திரங்கள், மோப்ப நாய்கள் மற்றும் வெப்ப சலனத்தை உணரும் ட்ரோன்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

# பாராளுமன்ற ஊழியர்களின் கொடுப்பனவுக்கும் ஆப்பு

பாராளுமன்ற ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமை தொடர்பில் அவர்கள் ஏற்கெனவே பாராளுமன்ற பிரதானிகளிடம் புகார் அளித்துள்ளனர்.

மேலதிக நேர ஊதியம் மற்றும் சம்பள முரண்பாடுகள் இல்லாததால், முந்தைய பல அரசாங்கங்கள் சிறிது காலமாக பாராளுமன்ற ஊழியர்களுக்கு இந்த சிறப்புக் கொடுப்பனவுகளை தொடர்ந்து வழங்கி வந்ததாகக் கூறப்படுகிறது.

கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டதற்கு எதிராக சட்டப்படி வேலையில் குதிப்பதற்கு, பாராளுமன்ற ஊழியர்களும் தயாராகி வருவதாகத் தெரிகிறது.

# “முன்னாள் ஜனாதிபதிகளுக்கு தடையை விதிக்கவும்”

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

இலங்கை அரசானது பொறுப்புக்கூறலில் இருந்து நீண்டகாலமாகத் தவறியுள்ளது. இதனால் நாம் சர்வதேச நீதி கோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். இன்று போர் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டதாக சில இராணுவ தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத்தடைவித்துள்ளதன் மூலம் இனப்படுகொலை ஒன்று இங்கு நடந்துள்ளதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதை உணர முடியும்.

இவ்வாறு தடை விதிக்கப் படவேண்டிய இன்னும் பல இராணுவத்தினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் உள்ளனர். அவர்கள் மீதும் இவ்வாறு தடைகளை விதிக்க வேண்டும்.

அனைத்துலக நாடுகளும் இந்த பயண தடைகளை விதித்து குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி சர்வதேச பொறிமுறை ஊடாக எமக்கான நீதியைப் பெற்றுத் தர வேண்டும்.

இதுவே எமது எதிர்பார்ப்பு

இதேவேளை, காணாமல் போன உறவுகள் 19 பேர் உயிருடன் இருப்பதைத் தாம் கண்டுபிடித்துள்ளதாகக் காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தினர் அண்மையில் கூறியுள்ளனர்.

அவர்கள் உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோர் இல்லை.நாம் தந்த சாட்சியங்களில் ஒன்றை கூட அந்த அலுவலகத்தினர் கண்டுபிடிக்கவில்லை.

மாறாக சர்வதேசத்துக்கு அப்பட்டமான பொய்களை சொல்கின்றனர். பொய்யான அறிக்கைகளை அவர்கள் வெளியிடுகின்றனர்.

எனவே, எமது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இந்த நிலையில் சர்வதேச நீதிப் பொறிமுறையூடாகவே எமக்கான நீதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.

# “உப்புசப்பற்ற இடப்பெயர் அல்ல”

பேரியலில் பின்னிப்பிணைந்து அவர்தம் ஆன்மாவுடன் இரண்டறக் கலந்து விட்ட பெயர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனையிறவில் தயாரிக்கப்படும் உப்புக்கு ‘ரஜலுணு’ என்ற வர்த்தக நாமம் சூட்டப்பட்டிருக்கிறது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

யானைகள், தாவர உண்ணிகள் என்பதால் அவற்றின் உடலில் உப்பு சத்து பற்றாக்குறை ஏற்படும்போது, அவை உப்பைத் தேடிச் சென்று உண்பது வழமை. ஆனையிறவு என்ற பெயர் நிலவுவதற்கு, வன்னிக் காட்டு யானைகள் உப்பைத் தேடி வந்த கடவை இது என்பதோடு, ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வன்னி யானைகள் ஏற்றுமதியின் பொருட்டு யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பாதையாக இது அமைந்தமையுமே காரணமாகும்.

ஆனையிறவு கடல் நீரேரிகளின் கரைகளில் உப்பு விளைவதை அவதானித்த ஆங்கிலேயர்கள் 1938இல் ஆனையிறவு உப்பளம் அமைத்தனர்.

இங்கு விளையும் உப்பை மூலப் பொருளாகக் கொண்டு 1954இல் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை உருவானது. உப்பளமும், இரசாயனத் தொழிற்சாலையும் யுத்தம் உச்சம் பெறும் வரைக்கும் ஆயிரக்கணக்கானவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலைவாய்ப்புகளை வழங்கியிருந்தன.

ஆனையிறவின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக 1760இல் போர்த்துக்கேயர்கள் தங்களது இராணுவத் தளமாக இங்கு கோட்டை ஒன்றை உருவாக்கினர்.

# “அடையாளப் பெயரை உறுதி செய்யவும்”


குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தின் கைத்தொழில் பொருளாதார அடையாளங்களுள் ஒன்றான ஆனையிறவு உப்பளத்தை மீள ஆரம்பித்தமை காலத்தேவையான செயற்பாடாகும். 1937ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்தில் 1938ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஏறத்தாழ ஒன்பது தசாப்த பாரம்பரியம் மிக்க ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகள் சனிக்கிழமை (29) முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சி அளித்தாலும், ‘ஆனையிறவு உப்பு’ என்ற அடையாளப் பெயர் ‘ரஜலுணு’ என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கிடைக்கும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் கைத்தொழில் பேட்டைகளுள் முதன்மையானதும், முக்கியத்துவம் மிக்கதுமான ஆனையிறவு உப்பளம் என்பது எமது மக்களின் அடிப்படை வாழ்வியலோடு இணைந்த ஓர் அடையாளம் ஆகும். அத்தகையதோர் கைத்தொழிற் கட்டமைப்பை மீள ஆரம்பிக்கும் போது அதன் அடிப்படை அடையாளத்தை மாற்றம் செய்கின்றமை தங்கள் அரசாங்கத்தின் மீதான அபிமானத்தையும், இன நல்லிணக்கம் குறித்த தங்களின் சிந்தனைப் போக்கையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளது.

குறிப்பாக, கடந்த காலங்களில் இனத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அடையாளத் திணிப்புகளைப் போலவே, எமது மொழியியல் அடையாளத்தை சிதைத்து, பெரும்பான்மை இனத்தின் தனித்துவத்தை வலிந்து புகுத்தும் இன மேலாதிக்கச் செயற்பாடாகவே இதனையும் கருத வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

பாராளுமன்றத்தில் ஆனையிறவு உப்பளம் குறித்து 2025.03.18ஆம் திகதியன்று, நான் கேள்வி எழுப்பியபோது வலியுறுத்தியதற்கு அமைவாகவும், எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை ‘ஆனையிறவு உப்பு’ என்ற பாரம்பரிய பெயருடனேயே விற்பனை செய்வதை உறுதி செய்யுமாறு தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது.



# "மறுமலர்ச்சி யுகத்திற்கான எதிர்பார்ப்புகள் நிறைவேறும்"



உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களால் ஒரு மாத கால நோன்பு நோற்று, தலைப்பிறை பார்த்ததன் பின்னர் கொண்டாடப்படும் ஈதுல்-பித்ர் பெருநாள், இஸ்லாமிய நாட்காட்டியில் மிக முக்கியமான சந்தர்ப்பமாகும் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான ரமழான் மாத நோன்பு, உலக ஆசைகளிலிருந்து தூரமாகி, அர்ப்பணிப்பு மற்றும் எளிமையுடனான முன்மாதிரி நடைமுறையை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. உலகெங்கிலும் பசியால் வாடும் மக்களுக்குத் தானதருமம் செய்யவும், உள்ளத்தைக் கட்டுப்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்ளவும், இந்த மாதம் ஒரு சிறந்த வாய்ப்பாக முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களுடன் கூடிய முன்னேற்றகரமான இலங்கை தொடர்பில் இந்த நாட்டு மக்களின் அபிலாஷைகளை நனவாக்கி,சுதந்திரம், சமத்துவம், ஒற்றுமை மற்றும் கண்ணியம் நிலவும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப நாம் எடுக்கும் முன்னெடுப்பில் இஸ்லாத்தின் இந்த போதனைகள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல், பொதுமக்களின் நிதி மற்றும் அரச சொத்துக்களை அழிக்கும் அநாகரிகமான அரசியல் கலாச்சாரத்திற்குப் பதிலாக, எளிமை மற்றும் அர்ப்பணிப்புடன் மக்களின் உணர்வுகளை உணரக் கூடிய ஒரு அரசியல் கலாசாரத்தையும் பிரஜைகள் சமூகத்தையும் நாட்டில் கட்டியெழுப்புவதற்கான நமது முயற்சிகளில் ரமழான் மாத செயற்பாடுகள் ஒரு சிறந்த முன்மாதிரியாக அமையும்.

மத எல்லைகளைக் கடந்து, மனிதநேயத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்தும் சுயநலத்திற்குப் பதிலாகப் பரோபகாரத்தை ஊக்குவிக்கும் பண்டிகையான ஈதுல்-பித்ர் பெருநாளைக் கொண்டாடுகின்ற இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறுமலர்ச்சி யுகத்திற்கான எதிர்பார்ப்புகள் நிறைவேறும் சமாதானம், நல்லிணக்கம் நிறைந்த இனிய ஈதுல் பித்ர் பெருநாளுக்கு வாழ்த்துகிறேன்.

# சுபிட்சத்திற்கான செய்தியை கொண்டு வரட்டும்



இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள முஸ்லிம் சகோதர சகோதரிகள் ஈதுல்-பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இவ்வேளையில், அமைதி, சுபிட்சம் மற்றும் ஆன்மிக ஈடேற்றத்திற்காக எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஆழ்ந்த ஆன்மிக ஈடுபாடு, இறை வழிபாடுகள் மற்றும் சுய ஒழுக்கத்தினை அதிகரிக்கும் ரமழான் மாதம் இரக்கம், தாராள மனப்பான்மை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் பெறுமானங்களை எமக்குக் கற்பிக்கிறது. இந்த புனித மாதத்தில் எமது சகோதர முஸ்லிம் சமூகத்தினர் கடைபிடிக்கும் நோன்பு ஒரு வணக்க வழிபாடாக மட்டுமன்றி, எமது ஆதரவற்ற சகோதர சமூகத்தினர் எதிர்கொள்ளும் போராட்டங்களை எமக்கு நினைவூட்டுகிறது. அது குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூகத்துடனான எமது பிணைப்பை வலுப்படுத்தும் அதே வேளையில், பொறுமை, பணிவு மற்றும் நன்றியுணர்வு ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகும்.

கருணை, மன்னிப்பு மற்றும் நற்பணிகளில் ஈடுபடல் போன்ற மனிதநேய செயற்பாடுகளையும் அது உட்பொதிந்துள்ளது. குறிப்பாக இக் காலப்பகுதியில் நிறைவேற்றப்படும் சகாத் மற்றும் சதகா ஆகிய நட்கருமங்கள் சமூகத்தில் தேவையுள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் முக்கியத்துவத்தைப் பிரதிபலிப்பதுடன், உண்மையான சுபிட்சம் என்பது அடுத்த மனிதர்கள் எழுந்து நிற்க உதவுவதாகும் என்பதை எமக்கு நினைவூட்டுகிறது.

இவை உலகளாவிய பெறுமானங்களாகும் என்பதுடன், முஸ்லிம்கள் மட்டுமின்றி அனைத்து சமூகங்களுடனும் மிக ஆழமாகப் பிணைந்திருக்க வேண்டியவையாகும். மேலும் இவை பல்வேறு சமயங்கள் மற்றும் நம்பிக்கை கோட்பாடுகள் மற்றும் சமூக பின்னணியில் உள்ள மக்களிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்கின்றன.

நாம் வாழும் இலங்கைத் தேசம் பன்முகத்தன்மையினால் வளம்பெற்ற ஒரு தேசமாகும். பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பு மூலம் எமது எதிர்காலத்தை வலுப்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இந்த ஈகைத் திருநாள் எமக்கு நல்லிணக்கம், சகிப்புத்தன்மை, நீதி மற்றும் அமைதியை நோக்கி செயல்பட வேண்டியதன் அவசியத்தை நினைவூட்டுகிறது.

ரமழான் மாதம் மகிழ்ச்சியான ஈத் கொண்டாட்டத்துடன் நிறைவடைகின்ற போதிலும், அது நம்மிடம் விட்டுச் செல்லும் இரக்கம், ஒற்றுமை மற்றும் நற்பண்பு ஆகிய பெறுமானங்களை எமது அன்றாட வாழ்வில் இணைத்துக்கொள்ளப் பாடுபடுவோம். இந்த அருள் நிறைந்த மாதம் எமக்கும் முழு தேசத்திற்கும் அமைதி மற்றும் சுபிட்சத்திற்கான செய்தியைக் கொண்டு வரட்டும் என அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# "சுபிட்சத்தை நோக்கி ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்"



ஒரு மாத காலமாக நோன்பு நோற்று ஈதுல்-ஃபித்ர் பெருநாளைக் கொண்டாடும் இவ்வேளையில், உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கும் மத, சமூக, கலாசார செய்தியை வழங்கும் ரமழான் பெருநாள் தினத்தை முன்னிட்டு, அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமியர்களின் மத நம்பிக்கையில் பன்னிரண்டு மாதங்களில் ஒன்பதாவது மாதமாகக் கருதப்படும் ரமழான் மாதம், நன்மை தரும் மாதமாக அழைக்கப்படுகிறது. இந்த மாதத்தில் ஒரு நாளைக்கு சுமார் 14 மணி நேரம் இறைவனுக்காக நோன்பு நோற்று, அனைத்து துன்பங்களையும் தாங்கி, தன்னைக் கட்டுப்படுத்தி, சமூகத்திற்கு நலன் பயக்கும் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை உருவாக்கத் தேவையான வழிகாட்டுதலை வழங்குகிறது.

மேலும், இது தாராள மனப்பான்மை மற்றும் சமத்துவத்தின் மகத்தான செய்தியை உலகிற்குக் கொண்டு வரும் மிக முக்கியமான பெருநாள் பண்டிகையாகவும் குறிப்பிடலாம்.

ஒரு நாடாக, நாம் மீண்டும் பல சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், இந்த நிலையிலிருந்து அனைவரும் ஒன்றிணைந்து மீள்வதற்கான வழிகாட்டுதலை ரமழான் பண்டிகையிலிருந்து முன்மாதிரியாகக் கொள்ளலாம். தன்னைப் பற்றி மட்டுமல்லாமல் மற்றவர்களைப் பற்றியும் சிந்தித்து செயல்படுவதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய சுபிட்சத்தை நோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இது தற்போதைய வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டு மீண்டும் சுபிட்சத்தை நோக்கிப் பயணிக்க உதவியாக இருக்கும் என்றும் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



# "பல நோய்களை ஒழிக்க முடிந்தது"

நமது சுகாதாரப் பணியாளர்களின் திறமையான மற்றும் தரமான சேவையின் காரணமாக, போலியோ, தட்டம்மை, ரூபெல்லா மற்றும் பிறந்த குழந்தை மஞ்சள் காமாலை போன்ற நோய்களை ஒழிக்க முடிந்தது என்றும், ஹெபடைடிஸ் பி உட்பட பல தடுப்பூசி மூலம் தடுக்கக்கூடிய நோய்களை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதன் மூலம் சுகாதார சேவை நாட்டின் சிறந்து விளங்குவது உலகிற்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்த சாதனைகள் அனைத்தும் நமது நோய்த்தடுப்பு திட்டத்தின் வலிமைக்குப் பெரிதும் உதவுகின்றன, மேலும், அதற்காக அயராது உழைத்த அனைத்து சுகாதார நிபுணர்களின் அர்ப்பணிப்பு இதற்கு சிறந்த சான்றாகும். தேசிய அதிகாரமளிப்பு மாநாட்டில் பிரதம விருந்தினராகப் பங்கேற்றபோது அமைச்சர் இதை வலியுறுத்தினார்.

சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, தொற்றுநோயியல் பிரிவு இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டிற்கு, உலக சுகாதார அமைப்பு, GAVI தடுப்பூசி கூட்டணி மற்றும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (யுனிசெஃப்) ஆகியவற்றின் ஆதரவு கிடைக்கும். இந்த மாநாடு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் சனிக்கிழமை (29) நடைபெற்றது.

இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம், குழந்தைகளுக்கு தற்போது வழங்கப்படும் தடுப்பூசி அளவுகளை மதிப்பாய்வு செய்வது, தடுப்பூசி அளவுகளில் ஏற்படும் மாற்றங்களின் தொழில்நுட்ப அம்சங்களைப் பற்றி ஆலோசனை செய்வது மற்றும் முடிவுகளை எட்டுவது, அத்துடன், அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டிய புதிய நோய்த்தடுப்பு தடுப்பூசிகளின் வடிவம் மற்றும் வகை குறித்து ஆலோசிப்பது மற்றும் எதிர்கால பரிந்துரைகள் மற்றும் திட்டங்களை வகுப்பதாகும்.

தொற்று மற்றும் தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும் ஒரு வலுவான அடித்தளமாக ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்த தற்போதைய அரசாங்கம் செயல்பட்டு வருவதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்த நாட்டு மக்களுக்கு உலகளாவிய சுகாதார சேவைகளை வழங்குவதில் தற்போதைய அரசாங்கம் உறுதியாக உள்ளது என்று அவர் தெரிவித்தார். உலக சுகாதார அமைப்பின் 2030 உலகளாவிய நோய்த்தடுப்பு நிகழ்ச்சி நிரலால் நிர்ணயிக்கப்பட்ட உலகளாவிய நோய்த்தடுப்பு இலக்குகளை அடைவதற்கு இலங்கை அரசாங்கம் முழுமையாக ஒத்துழைத்துள்ளது என்பதையும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த நாட்டு மக்களுக்கு சிறந்த சுகாதார பலன்களை பெற தடுப்பூசிகளை விரிவுபடுத்துதல், புதிய தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துதல் போன்ற தொடர் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு நோய்த்தடுப்பு செயல்முறையைத் தொடர்வதில் GAVI கூட்டணியின் பங்களிப்பைப் பாராட்டுவதாகவும், தடுப்பூசி அணுகலை மேம்படுத்துதல், விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துதல் மற்றும் பொது சுகாதார சேவைகளை மேலும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக புதிய தடுப்பூசிகளை அறிமுகப்படுத்த GAVI உடன் தொடர்ச்சியான கூட்டாண்மைகளை ஆராய்வதை ஆவலுடன் எதிர்நோக்குவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மது தயாரித்த மூவர் கைது



ஜா-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒத்கெலே மற்றும் ஹல்லக்கட சதுப்பு நிலப் பகுதிகளில் பொலிஸாரால் சனிக்கிழமை (29) அன்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோதமாக மதுபான தயாரிப்பில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் ஏக்கல மற்றும் தொலஸ்பாகே பகுதிகளை சேர்ந்த 30, 32 மற்றும் 50 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

இதன்போது, ஒத்கெலே பகுதியிலிருந்து 40,500 லீற்றர் (200 பீப்பாய்கள்) கோடா, 843 லீற்றர் சட்டவிரோத மதுபானமும், ஹல்லக்கட பகுதியிலிருந்து 5,481 லீற்றர் (29 பீப்பாய்கள்), 225 லீற்றர் சட்டவிரோத மதுபானம், 03 செப்பு சுருள்கள் மற்றும் 02 எரிவாயு அடுப்புகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.



# 'சர்வதேச துணிச்சலான பெண்' விருது நாமினிக்கு

இலங்கையின் பெண் பத்திரிகையாளர் நாமினி விஜயதாச புலனாய்வு ஊடகவியலுக்கு ஆற்றிவரும் பெரும் பங்களிப்பையும் ஊழலை அம்பலப்படுத்துவதற்கான அவரது அர்ப்பணிப்புக்காக அமெரிக்க இராஜாங்க செயலாளரின் 'சர்வதேச துணிச்சலான பெண்' விருதை வழங்கி கௌரவித்துள்ளது.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பத்திரிகையாளராக பணிபுரியும் நாமினி விஜயதாச தனது செய்தி அறிக்கையிடலில் துணிச்சலையும் நேர்மையையும் வெளிப்படுத்தி வந்துள்ளார். இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது, ஏற்பட்ட மனித பாதிப்புகளைப் பதிவு செய்வதன் மூலம் தனது ஊடகவியலாளர் பணியை ஆரம்பித்த அவர், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான குரலாக விளங்கினார்.

அவரது புலனாய்வுப் பணி அரசாங்கத்தின் முறைகேடுகள் மற்றும் மனித உரிமை மீறல்களை வெளிச்சம் போட்டுக்காட்டியது, தனிப்பட்ட ஆபத்தையும் பொருட்படுத்தாமல் அவர் அந்த பணியை முன்னெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாகன விபத்தில் சிறுவன் படுகாயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

சுற்றுலா சென்ற இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் படுகாயமடைந்து கரவனெல்ல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக எட்டியாந்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து ஹட்டன்-கொழும்பு பிரதான வீதி யட்டியாந்தோட்டை, ஹக்பெல்லாவ பகுதியில் சனிக்கிழமை (29) மாலை நிகழ்ந்துள்ளது.

கொட்டாவ பிரதேசத்தில் இருந்து கிதுல்கல நோக்கிப் பயணித்த கார் நுவரெலியாவிலிருந்து வாதுவை நோக்கி எதிர்த் திசையில் பயணித்த காருடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.




கொட்டாவையில் இருந்து கிதுல்கல நோக்கிச் சென்ற கார் சாரதியின் நித்திரை கலக்கமே விபத்திற்கான காரணம் என தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை யட்டியாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தேர்தல் கலந்துரையாடல்

■ ஏ.எச்.ஏ.ஹூஸைன்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் மட்டக்களப்பில் உயரதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடல், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ஜஸ்டினா ஜுலேகா தலைமையில் பழைய மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (28) இடம்பெற்றது.

தேர்தல்கள் உதவி ஆணையாளர் எம்.எ.எம்.சுபியானின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்காக மேற்கொள்ளப்படவுள்ள முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர்களான சுதர்ஷினி சிறீகாந்த், நவரூபரஞ்சினி முகுந்தன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படை உயர் அதிகாரிகள், உயர் பொலிஸ் அதிகாரிகள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ரஜீவ் அமரசூரிய பதவியேற்பு



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக ரஜீவ் அமரசூரிய, சனிக்கிழமை (29)அன்று பதவியேற்றுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக ரஜீவ் அமரசூரிய, கடந்த மாதம் 19ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டார்.

இவர், சட்டத்தரணிகள் சங்கத்தின் 29ஆவது தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இருவர் கைது

யாழ்ப்பாணம் நகரில் சுமார் 9 கிலோ 300 கிராம் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இருவர், ஞாயிற்றுக்கிழமை(30) கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி வழிகாட்டலில் உதவி பொலிஸ் பரிசோதகர் நந்தகுமார் குழுவினர் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைதான 40 வயது மதிக்கத்தக்க இருவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# அடக்குமுறை வெறியை மேலும் வலுப்படுத்துகிறது

தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாக 1979ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம், இன்றும் நடைமுறையில் உள்ள ஒரு சட்டமாகும்.

இந்த சட்டம் சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் விமர்சிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இந்த பயங்கரவாத தனிச் சட்டத்தைத் திருத்துவதாக அறிவித்திருந்தது,

இவ்வாறான நிலையில், நாட்டில் சாதாரண பொதுமகன் மீது, பொலிஸாரும், அதிகாரத்தைக் கையிலெடுக்கும் தரப்பினரும் மிகவும் அடாவடித்தனமாக நடந்து கொள்கின்றனர். இல்லையேல், தப்பிக்க முயன்றனர். தங்களிடமிருந்து ஆயுதங்களை அபகரிக்க முயன்றனர் என கூறி, பதில் தாக்குதல் நடத்தினோம். அதில் சந்தே நபர் மரணமடைந்து விட்டார் என பொலிஸ் தரப்பு விளக்கம் கொடுத்து இருக்கிறது.

வாகனத்துக்கான தவணைக் கட்டணத்தை முறையாக செலுத்தாமையால், அந்த வாகனத்தை அபகரிக்க வந்த நபர்கள், வாகன சாரதியை அல்லது உரிமையாளரைக் கடுமையாகத் தாக்கிய சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. இதனை சாதாரண பொதுமகனே, வீடியோவாக எடுத்துப் பதிவேற்றியிருந்தார். அத்துடன், பாதிக்கப்பட்டவருக்காகக் குரல் கொடுத்தார்.

"சாதாரண பொதுமகனால் சட்டத்தைக் கையில் எடுக்க முடியாது" என்றும் அவ்விடத்தில் எதிர்த்துக் குரல் கொடுத்தார்.

இந்நிலையில், வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், அங்கு ஒருபடி மேலே நடக்கிறது. போதைப்பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவரை கைது செய்ய சென்ற பொலிஸார், மற்றுமொருவரைப் பிடித்து, அவர் மீது சரமாரியாகத் தாக்குதல்களை நடத்தி விட்டு, இறுதியில், தவறாக கைது செய்து விட்டோம் என்று விளக்கமளித்துள்ளது.

முக்கிய குற்றச்சாட்டுகளில் பயங்கரவாத சந்தேக நபர்களுக்கு மேலதிகமாக, தற்போதைய அரசாங்கங்கள் அரசியல் எதிரிகளை அடக்குவதற்கும், இன அல்லது மதக் கருத்துக்களைக் கொண்ட மக்களை அடக்குவதற்கும் இதைப் பயன்படுத்துகின்றன என்பதும் அடங்கும். இஸ்ரேலுக்கு எதிராக சுவரொட்டியை ஒட்டிய நபர், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி, எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு எதிராகக் கடுமையாகக் குரல் கொடுத்த அரசியல் கட்சியாக அறியப்படுகிறது.

"அரசாங்கங்கள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் போராட்டத்தின் முன்னாள் மாணவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தின", "நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற சித்தாந்தம் நிறைய உள்ளது" என்பதை நினைவு படுத்துகின்றோம்.

"தேசிய மக்கள் சக்தி, ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்று கூறியிருக்கின்றது. "எனவே, தற்போதைய அரசாங்கம் எந்த வகையிலும் இதிலிருந்து தப்பிக்க முடியாது" என்பதே உண்மையாகும்.

"இனவெறி தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் முழுமையாக உடன்படுகிறோம்", இனவெறியைத் தோற்கடிக்க அடக்குமுறையைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. "அடக்குமுறை இனவெறியை மேலும் வலுப்படுத்துகிறது" என்பதையும் நினைவூட்ட விரும்புகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

உலகை நோக்கும் ஒரு மனிதனை, உலகமும் ஏறெடுத்துப் பார்க்கின்றது. இதை நீங்கள் உறுதியுடன் தீட்சண்யமாக உணருங்கள். வையகமும் மனிதனும் ஒன்றோடு ஒன்றாகப் பிணைந்தவர்கள்.

எனவே, நீங்கள் என்றும் உலகை விரும்புங்கள், அதனுடன் பயணிப்பீர்களாக! உலக ஈர்ப்பு உங்களை நாடிவிடுகின்றன. மனம் மகா வல்லமையும் வசீகரமும் கொண்டது. உலகம் மட்டுமல்ல, பிரபஞ்சமும் எமக்கானது.

நாங்கள் உலகை வெறுக்க வேண்டிய அவசியம் கிடையாது. எவரையும் குறை சொல்வதும் துன்பம் வந்தால், பூமியில் ஏன் பிறந்தேன் என சலிப்படைவதும் சிறப்பான வாழ்வு அமைந்தால், தன்னையும் பிறந்த மண்ணையும் மறப்பதும் தவறானது.

இன்று பல உலகத் தலைவர்கள், தங்களின் தேசம் மகத்தானது. எல்லாமே தங்களுக்கானது என கருதி மமதை கொள்கின்றார்கள். இவர்கள் கடவுளுக்கு மட்டுமல்ல, மனிதனுக்கும் பயப்படுவதில்லை.

போரை விரும்புகின்றார்கள், வலிந்து சண்டைக்குப் போகின்றார்கள். வெளி நாடுகளுடன் போரிட விரும்பாதவர்கள், தங்கள் நாட்டுக்குள் வீரம்பேசி, மக்களை முடக்குகின்றார்கள். கடவுளை நம்புங்கள்; பிறந்த அகிலத்தைப் போற்றுங்கள்.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# அரசுகள் தலையிடாக் கொள்கை

**லக்ஸ்மன்**

> **இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இருந்தாலும், இழுவை மடிகளைக் கொண்ட ரோலர் படகுகள் கடல் வளத்தை நாசப்படுத்திக் கொண்டிருப்பதனை எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது**

இழுவைப் படகுகள் மூலம் இழுத்தெடுக்கப்படுவது மீன்கள் மாத்திரமல்ல, எதிர்கால தலைமுறையையும், எதிர்கால வாழ்க்கையையுமாகும். இவ்வாறு அழிக்கப்படுமானால், இன்னும் 15, 20 வருடங்களுக்குப் பிறகு எங்களது கடலில் எதுவுமே இல்லாது போவதுடன், கடல் பாலைவனமாக மாறுகின்ற நிலை ஏற்படும். இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் இந்நாட்டில் உள்ள ஐம்பதாயிரம் மீனவ குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சம் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வட மாகாண கடற்றொழிலாளர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

இழுவைப் படகுகள் என்பது இந்தியாவிலும் தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இந்தியாவில் இருக்கின்ற மீனவர்கள் கூட இதற்கு வன்மையான எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றார்கள். இந்த மீன்பிடி முறைமையை நிறுத்த வேண்டும். கடலுக்கு அடியில் வலைகளைப் பயன்படுத்தி மீன்களை அள்ளும் இழுவை மடி படகுகள் மூலம் இலங்கைக் கடலில் மீன் பிடியில் ஈடுபட அனுப்பப்படுவது இந்திய கூலித் தொழிலாளர்களே. அந்த செயற்பாடு தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்று. இந்திய மீனவர்கள் நமது நாட்டுக் கடற்பரப்பில் ஆக்கிரமிப்பு செய்வது குறித்து இந்தியாவின் அனைத்து பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் அறிந்திருக்கின்றனர் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அண்மையில் தெரிவித்திருந்தார். இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினை புதிய அரசாங்கத்தின் காலத்தில் நடைபெற ஆரம்பித்ததல்ல. மிக நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகின்ற பிரச்சினையாகும். இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற் பரப்புக்குள் நுழைவதும், அவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், அவர்களுடைய உடமைகள் பறிமுதல் செய்யப்படுவதும், நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதும், தண்டனை வழங்கப்படுவதும், விடுவிக்கப்படுவதும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

இந்திய மீனவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் குறைந்தபாடுமில்லை. இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வந்ததுமில்லை. இந்தநிலையில், கடந்த வாரத்தில் இந்திய இலங்கை மீனவர் சங்கத்தினர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை வவுனியாவில் நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தையில் இந்திய மீனவர்களால் இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இருந்தாலும், இரு தரப்பினரும் இப்பிரச்சினைக்கான தீர்வு அரசுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படக்கூடியது என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

இருந்தாலும், கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவின் முதல் உத்தியோகபூர்வ விஜயத்தில் புதுடெல்லியில் இந்தியப் பிரதமருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, இரு நாட்டுத் தலைவர்களும் மீனவர் பிரச்சினையை 'முக்கியமானது' என அடையாளம் கண்டிருந்தனர். மீனவர்களின் பிரச்சினைக்கு மனிதாபிமான முறையில் தீர்வுகாண வேண்டும் என்றும் அறிவித்திருந்தனர். ஆனால், மீனவர் பிரச்சினை விடயத்தில் மனிதாபிமான உதவிகளை வழங்குவது அல்லது பெறுவது தொடர்பில் இனி பேச்சுவார்த்தைகள் எதுவும் இல்லை என மீன்பிடி, நீரியல் மற்றும் கடல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் டிசெம்பர் இறுதியில் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். அதே நேரத்தில், கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளுக்கும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்கள் நிறுத்தப்படமாட்டாது எனவும், தொழில்நுட்பம், தொழில்சார் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் மாத்திரமே கலந்துரையாடல் தொடரும் என்றும் அவர் தெரிவித்ததற்கமைய இந்திய இலங்கை மீனவர்களுக்கிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளதாகக் கொள்ளலாம்.

ஆனால், இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இராஜதந்திர மட்டத்தில் மாத்திரம் உள்ள பிரச்சினையல்ல. இராஜதந்திர ரீதியில் எவ்வளவு விவாதித்தாலும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இந்திய மீனவர்கள் வடக்குக் கடலில் மீன்பிடிப்பது குற்றவியல் ஆக்கிரமிப்பு போன்ற நிலைப்பாடுகள் இலங்கையின் அமைச்சு வட்டம் வரையில் இருக்கின்ற நிலையில் இரு நாட்டு அரசுகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைக்குச் சாத்தியமிருக்கிறதா? என்பது கேள்வியானதே.

எது எவ்வாறானாலும், எங்களின் கடல் வளங்களையும், மீனவர்களையும் பாதுகாக்க இந்த விடயத்தில் எப்போதும் தலையீடு செய்து கொண்டுதான் இருப்போம் என்கிற நிலைப்பாட்டில் இலங்கை அரசும், ஏதோ நடப்பது நடக்கட்டும். நமது மீனவர்களைக் கட்டுப்படுத்தினால் அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாகி அரசுக்கெதிரான சிந்தனையை ஏற்படுத்தி விடும் என்ற முடிவில் இந்திய அரசும், சுமுகமான மீன்பிடிக்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்கிற நிலைப்பாட்டில் இந்திய மீனவர்களும் இருக்கையில் முரண்பாடே மிஞ்சும்.

இந்திய, இலங்கை மீனவர்களுக்கிடையில் இருக்கும் தாண்டிய மீன்பிடி காரணமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு இந்திய மத்திய அரசும் தமிழ்நாட்டு அரசும் தீர்வைக் காண்பதற்கு முயற்சிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அந்த முயற்சி இலங்கை நாட்டின் இறமை, ஆட்புல ஒருமைப்பாட்டினைப் பாதிக்காத வகையில் இருந்தால் சரி.

1921ஆம் ஆண்டு இந்திய - இலங்கை பிரிட்டிஷினால் செய்து கொள்ளப்பட்ட மீன்பிடி ஒப்பந்தத்தின்படி, இந்திய மீனவர்களுக்குப் பாக்கு நீரிணையில் அதிக கடல்பகுதியும், இலங்கை மீனவர்களுக்கு குறைவான கடல் பகுதியும் பிரிக்கப்பட்டது. அதில் கச்சத்தீவு உள்ளிட்ட 28 கடல் மைல் பகுதிகள் இந்தியாவுக்கும் நெடுந்தீவு உள்ளிட்ட 12 கடல் மைல் கடல் பகுதிகள் இலங்கைக்கும் என பிரிக்கப்பட்டன.

1974இல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. அதனால் இந்திய மீனவர்கள் பயன்படுத்தி வந்த 500 சதுர கி.மீ. கடல் இலங்கை வசமாகியது. இதனால், தமது பாரம்பரிய மீன்பிடி பகுதிகள் பறிபோனதாக இந்திய மீனவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால், 1974 கச்சத்தீவு ஒப்பந்தத்தின் 6ஆம் சரத்துப்படி, இந்த 500 சதுர கி.மீ. பரப்பளவில் இரு நாட்டு மீனவர்களும் மீன்பிடிக்க உரிமையுள்ளது.

இருந்தாலும், பாக்கு நீரிணைப் பகுதியில் இழுவைப் படகுகளைப் பயன்படுத்துவதும் இழுவை வலைகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதனாலேயுமே பிரச்சினைகள் எழுகின்றன. இந்திய இலங்கை மீனவர்களிடையே இருக்க வேண்டிய ஒற்றுமை சீர்குலைவுக்கும் இதுவே காரணம். பாக்கு நீரிணை கடல்பகுதியில் இந்திய மீனவர்கள் தடைசெய்யப்பட்ட இழுவை வலையைப் பயன்படுத்தக்கூடாது என்பது இலங்கை மீனவர்களின் ஒரு கோரிக்கை.

இழுவைப் படகுகளின் செயற்பாட்டினால், இலங்கைக் கடற்பரப்பிலுள்ள மீனும் பிற வளங்களும் அழிகின்றன. அதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. நீண்டகாலத்தில் எதிர்கால மீன்பிடியே அழியவேண்டி ஏற்படலாம் என்பது அச்சமே. ஒவ்வொருவரும் தம் பக்கமே நிற்பர் என்பது போல் இந்திய அரசும், தமிழ் நாட்டு அரசும் தமிழக மீனவர்களின் பக்கமாகவே இருந்து விடுகின்றன. இதனால், பாதிக்கப்படுவது இருதரப்புமே என்பதுதான் உண்மை.

கடந்த வாரத்தில் வவுனியாவில் நடைபெற்ற இந்திய-இலங்கை மீனவர் சங்க உறுப்பினர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தையும் கூட அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டவேளையில், கைது செய்யப்பட்டு வவுனியா சிறையில் வாடும் இந்திய மீனவர்களைப் பார்வையிடுதலுடன் தான் நடைபெற்றிருக்கிறது.

தீர்க்கப்படாமல் இழுபட்டுச் செல்லும் இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இருந்தாலும், இழுவை மடிகளைக் கொண்ட ரோலர் படகுகள் கடல் வளத்தை நாசப்படுத்திக் கொண்டிருப்பதனை எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது என்றிருக்கையில், தீர்வு எவ்வாறு கிடைக்கும் என்பதுதான் இந்த இடத்தில் சிக்கலானது. இந்தச் சிக்கல் பார்த்தும் பாராமல் தொடருமா? அல்லது ஓயுமா? என்பது பதிலில்லா தொடரே.

இந்திய இழுவை படகுகளுக்கு எதிரான கறுப்புக் கொடி போராட்டம், மீன்பிடிப் பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், அறிக்கைகள், ஊடக சந்திப்புக்கள் எனத் தொடர்ந்து கொண்டிருக்கும் எல்லை மீன்பிடிப் பிரச்சினை தீர்க்கப்படாதா என்ற சந்தேகம் ஏற்படுவதற்குத் தாமதிப்பும் இழுத்தடிப்புகளுமே காரணமாக இருக்கிறது.

இந்தியா இந்தப் பிரச்சினைக்கு நல்ல தீர்வை முன்வைக்கும் என்று எல்லோரும் எண்ணினாலும், தமிழக அரசும் பல வழிகளிலும் இந்திய மீனவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசை கோரினாலும் இந்திய மத்திய அரசாங்கமானது வருடத்தில் குறிப்பிட்ட அளவான நாட்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கோருகிறதே தவிர ஏதும் நடைபெறவில்லை.

ஆனாலும், இந்தியா கைக்கொள்ளும் அரசுகள் தலையிடாது மீனவர்களே தம் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வுக்கு வரட்டும் என்ற நிலைப்பாட்டைதான் நாம் விளங்கி நடந்து கொள்ளவேண்டும். இல்லையேல் இப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படப்போவதில்லை. அது தவிர, எல்லை தாண்டலை ஒரு குற்றமாகக் கொள்ளாது கைதுகளை விடுத்து ஏதோ நடக்கட்டும் என்ற நிலைப்பாட்டுக்கு இலங்கை வரவேண்டும்.

## கடிதங்கள்

### இரண்டு மாத மின் கட்டணம்; மக்கள் பாதிப்பு

ஹட்டன் மின்சார வாடிக்கையாளர் சேவை மையத்தால் நிர்வகிக்கப்படும் ஹட்டன் ருவன்புர கொலனியில், கடந்த இரண்டு மாதங்களுக்கான மின் கட்டணங்களைச் சனிக்கிழமை(22) அன்று வழங்கியமையால் வாடிக்கையாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அப்பகுதி மக்களுக்கு, கடைசியாக 25.01.2025 அன்று மின் கட்டணம் வழங்கப்பட்டுள்ளதுடன் , அதன் பின்னர் மார்ச் 22ஆம் திகதி இரண்டு மாதங்களுக்குரிய மின் கட்டணம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மின் கட்டணம் வழங்குபவரிடம் விசாரித்த போது அதற்குப் பதிலளிக்கும் வகையில், ருவன்புர கொலனிக்கு மாதாந்தம் மின் கட்டணங்களை வழங்கியவருக்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக, கினிகத்தேனை பிராந்திய மின் பொறியியல் அலுவலகம் இந்த பகுதியில் மின் கட்டணங்களை வழங்கும் பொறுப்பை தனக்கு வழங்கியுள்ளதாக மாத்திரம் கூறியுள்ளார்.

மின் கட்டணத்தைச் செலுத்தத் தவறினால், தங்கள் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் துண்டிக்கப்படும் எனவும் விவசாயம் மற்றும் கூலி வேலைகளில் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையை நடத்தும் நிலையில் இவ்வாறு, இரண்டு மாதங்களுக்கான மின்சார கட்டணத்தை உடனடியாக செலுத்த முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தி நிவாரணம் வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– ரஞ்சித் ராஜபக்ஷ

SLT–MOBITEL புத்தாக்க தினம் 2024 ஊடாக

# ஊழியர்களுக்கான தீர்வுகள் கொண்டாட்டம்




SLT-MOBITEL புத்தாக்க தினம் 2024 அண்மையில், மருதானை, ட்ரேஸ் சிட்டி, Embryo Innovation Centerஇல் அண்மையில் நடைபெற்றது. இதில், நிறுவனத்தின் ஊழியர்களினால் வடிவமைக்கப்பட்ட பல்வேறு தீர்வுகள் மற்றும் புத்தாக்கமான சிந்தனைகள் போன்றன வெளிப்படுத்தப்பட்டிருந்தன. டிஜிட்டல் யுகத்தில் உள்ளக புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான நிறுவனத்தின் உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்நிகழ்வு அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் SLT-MOBITEL சிரேஷ்ட முகாமைத்துவ குழுவினர், நிறுவனத்தின் இதர பிரதிநிதிகள் மற்றும் மதிப்பாய்வு குழு அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு எட்டு மாத கால Intrapreneurship Studio நிகழ்ச்சியின் வெளிப்பாடாக அமைந்திருந்ததுடன், SLT R&D இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மூன்று பிரிவுகளில் சிறந்த புத்தாக்கங்களை கௌரவிப்பதாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது. அவற்றில் சிந்தனை புத்தாக்கம், புதிய தயாரிப்பு மற்றும் தீர்வுகள் புத்தாக்கம் மற்றும் செயன்முறை மற்றும் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு (O&M) புத்தாக்கம் போன்றன அடங்கியிருந்தன. சிறந்த intrapreneurs களுக்கு நிறுவனசார் வளர்ச்சி மற்றும் வாழ்க்கைத் தர மேம்பாடு மற்றும் நலனை முன்னெடுத்திருந்த அவர்களின் பங்களிப்புகளுக்காக விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. நிகழ்வின் Demo தினம், 2024 டிசெம்பர் 8ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டதுடன், இளம் புத்தாக்கவியலாளர்களுக்கு தமது புத்தாக்க ஆற்றலை வெளிப்படுத்த வாய்ப்பளித்திருந்தது.

Intrapreneurship Studio நிகழ்வின் வெற்றியாளர்களுக்கு புத்தாக்கத்துக்கான அவர்களின் சிறந்த பங்களிப்புகளுக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பங்குபற்றுனர்கள் தமது தீர்வுகளை SLT-MOBITELஇன் சிரேஷ்ட முகாமைத்துவத்துக்கும் துறைசார் பங்காளர்களுக்கும் வெளிப்படுத்தி, திறமை மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கான நிறவனத்தை அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்தது. SLT-MOBITEL R&D இனால் வடிவமைக்கப்பட்ட நவீன தீர்வுகளை இந்த நிகழ்வு உள்ளடக்கியிருந்தது. அவற்றில், SenseGrid, Environmental Monitoring, OneClick, ParkEase மற்றும் Bank IoT போன்றன அடங்கியிருந்தன. நிஜ உலக சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான பிரயோக ரீதியான தீர்வுகளை கட்டியெழுப்புவதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இந்த புத்தாக்கங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

MAS Innovation இன் Futureworks பணிப்பாளரும், IQ Global இன் ஸ்தாபருமான அஹமட் இர்பான் இந்நிகழ்வில் விசேட பேச்சாளராக கலந்து கொண்டார். 'Trends in Innovation in the Service Industry,' எனும் தலைப்பில் இவர் விசேட உரையை ஆற்றியிருந்தார். அதனூடாக, சேவைத் துறையில் வளர்ந்து வரும் தொழினுட்ப முன்னேற்றங்களின் தாக்கம் மற்றும் எதிர்காலத்தில் அவற்றின் தாக்கம் ஆகியன தொடர்பில் முக்கியமான தரவுகளை பகிர்ந்திருந்தார்.

SLT-MOBITEL இன் மாற்றியமைப்பு பயணத்தில் புத்தாக்கம் ஆழமாக பதிந்துள்ளது. நிகழ்வில் வெளிப்படுத்தப்பட்ட சிறந்த தீர்வுகளினூடாக, இலங்கையின் தொழினுட்ப கட்டமைப்பில் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஊழியர்களின் ஆற்றல் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பங்குபற்றுனர்கள் மத்தியில் அறிவு பகிர்வு மற்றும் கைகோர்ப்பு ஆகியவற்றை ஒன்றிணைக்கும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

Havelock City Mall இல் சிறுவர்களுக்கான

# ஓவியப் போட்டிக்கு 'அருணலு' ஆதரவு




Havelock City Mall அண்மையில் ஏற்பாடு செய்திருந்த சிறுவர்கள் ஓவியப் போட்டி நிகழ்வின் உத்தியோகப்பூர்வ வங்கி பங்காளராக கொமர்ஷல் வங்கி தனது ஆதரவை வழங்கியிருந்தது. 4 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட 1,500க்கும் மேற்பட்ட சிறுவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றனர்.

'HCM படைப்பாற்றல் வெற்றித் தலைவர்கள் 2025' எனப் பெயரிடப்பட்ட இந்தப் போட்டி, கொமர்ஷல் வங்கியின் சிறுவர் சேமிப்புக் கணக்கான 'அருணலு'வுடன் தொடர்புடையதாக அமைந்திருந்தது. மேலும், வெற்றியாளர்களுக்கான வெற்றிக்கிண்ணங்கள் மற்றும் பரிசில்களை வங்கி வழங்கியது. இந்த நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் கூடத்திற்குச் சென்ற ஒவ்வொரு குடும்பத்தினரும் இலவசமாக புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர், மேலும் அன்றைய தினம் அருணலு சேமிப்புக் கணக்குகளைத் திறந்தவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்பட்டன.

கொமர்ஷல் வங்கியின் முதன்மையான சிறுவர் சேமிப்புக் கணக்கான அருணலு, சிறுவர் கணக்குகளுக்கு அதிக வட்டி விகிதத்தை வழங்குவதுடன், வங்கியில் கணக்கு வைத்திருக்கும் மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தங்கள் பாடசாலைகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்று சித்தியடையும்பட்சத்தில் சிறப்பு ரொக்கப் பரிசில்களையும் வழங்குகிறது.


கொமர்ஷல் வங்கி மற்றும் Havelock City Mall இன் பிரதிநிதிகளுடன் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை படத்தில் காணலாம்.

பலவந்தமாக எரிக்கப்பட்ட 278 பேரின் குடும்பங்களுக்கான

# பிரார்த்தனை நாள்

**அஸ்–ஷேக் எம்.எச்.எம்.புர்ஹான் பஹ்ஜி, அகில இலங்கை, ஜம்மியத்துல் உலமாவின் (தலைமை நிர்வாக அதிகாரி).**





கொவிட்-19 பாதிப்புக்குள்ளான ஒரு முஸ்லிமின் ஜனாசா முதல் தடவையாக, 2020 மார்ச் 31ஆம் திகதியன்று நீர்கொழும்பில் பலவந்தமாக எரிக்கப்பட்டது.

இது முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு சோகமானதும் வேதனையானதுமான அத்தியாயத்தைத் தொடக்கி வைத்தது. அதைத் தொடர்ந்து வந்த மாதங்களில், 29 நாள் குழந்தை உட்பட பாதிக்கப்பட்டவர்கள் 278 பேர் குடும்பங்களின் விருப்பத்திற்கு மாறாக தகனம் செய்யப்பட்டனர். தகனம் செய்யப்படுவோம் என்ற பயத்தினால் பல முஸ்லிம்கள் கொவிட்-19 ஆல் பாதிக்கப்பட்டபோது மருத்துவ உதவியை நாடுவதைத் தவிர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகினர்.

கட்டாய தகனம் தேசிய மற்றும் சர்வதேச சீற்றத்தைத் தூண்டியது, மனித உரிமை அமைப்புகளும் உலகளாவிய முஸ்லிம் சமூகங்களும் இந்தக் கொள்கையைக் கண்டித்தன. கொவிட்- 19 உறுதிப்படுத்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் உடல்களைக் கையாள்வதற்கான ஒரே வழியாகத் தகனம் செய்வதைத் திணிப்பது மனித உரிமை மீறலுக்கு இணையானது. இறந்த உடல்களை அடக்கம் செய்வதனால் கொவிட்-19 போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் அதிகரிக்கும் என்பதற்கு இலங்கையிலோ அல்லது வேறு நாடுகளிலோ நிறுவப்பட்ட மருத்துவ அல்லது அறிவியல் சான்றுகள் எதுவும் இல்லை.

இஸ்லாத்தில், தகனம் செய்வது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. நபிகள் நாயகத்தின் (ஸல்) முன்மாதிரியைப் பின்பற்றி, இறந்தவர்களைக் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் அடக்கம் செய்வதையே மார்க்கம் வலியுறுத்துகிறது. இறந்த பிறகும் மனித உடல் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும் என்று இஸ்லாம் கற்பிக்கிறது. உடலை எரிப்பது அதன் புனிதத்தை மீறுவதாகக் கருதப்படுகிறது.

மறுமை நாளில் உடல் ரீதியான உயிர்த்தெழுதலில் இஸ்லாம் நம்பிக்கை கொண்டுள்ளது. இறைவனால் எந்த வடிவத்தையும் உயிர்ப்பிக்க முடியும் என்றாலும், தகனம் என்பது இறந்த உடலைக் கையாள்வதற்கான இயற்கைக்கு முரணான வழியாகக் கருதப்படுகிறது என்பதோடு மறுமை வாழ்க்கை பற்றிய இஸ்லாமிய நம்பிக்கை மரபுகளுக்கும் முரணானது. குற்றவாளிகள் அல்லது எதிரிகளின் விவகாரங்களில் கூட, இறந்தவர்களை எரிப்பதை நபி (ஸல்) கடுமையாகத் தடுத்த சம்பவங்கள் நிறைய உள்ளன, நெருப்பை உடல்களை அப்புறப்படுத்துவதற்கான வழிமுறையாகப் பயன்படுத்தக்கூடாது என்பதை அவை உறுதிப்படுத்துகின்றன.

இவற்றை வைத்து, தகனம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது (ஹராம்) என்று இஸ்லாமிய அறிஞர்கள் ஒருமனதாக ஏற்றுக் கொள்கிறார்கள். கழுவுதல் (குஸ்ல்), கஃபன் (கஃபன்) மற்றும் தொழுகை (ஜனாசா) உள்ளிட்ட இஸ்லாமிய சடங்குகளைப் பேணி அடக்கம் செய்வதற்கே முஸ்லிம்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அடிப்படை உரிமையை மீறி மேற்கொள்ளப்பட்ட இந்த பலவந்த எரிப்பு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆழமான மன உளைச்சலையும் ஆத்மார்த்தமான காயங்களையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் அவர்களின் அன்புக்குரியவர்களுக்காகத் துக்கத்தை வெளிப்படுத்தவும் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. "(பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம்; அதனுள்ளேயே நாம் உங்களை மீட்டுவோம்; இன்னும், அதிலிருந்தே நாம் உங்களை மீண்டும் வெளிப்படுத்துவோம்." (குர்ஆன் 20:55) என்ற இறைவனின் கட்டளைப்படி, அடக்கம் செய்வதும் மீண்டும் மண்ணுக்கே சமர்ப்பிப்பதும் ஒரு சன்மார்க்கக் கடமை என்று இஸ்லாம் கற்பிக்கிறது. இதைப் புறக்கணிப்பதன் மூலம், மதச் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித கண்ணியம் இரண்டுமே மீறப்படுகிறது.

இந்த வேதனையான அநீதியை ஞாபகப்படுத்தும் வகையில் வகையில் , மார்ச் 31 ஆம் திகதியை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான பிரார்த்தனைக்கும் , உணர்வுகளைப் பிரதிபலிப்பதற்கும் ஆதரவு வழங்குவதற்குமான நாளாக அனுஷ்டிப்பதற்கு அனைத்து சமூகங்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம்,

இந்த நாளில், கண்ணியமாக அடக்கம் செய்வதற்கு மறுக்கப்பட்டவர்களின் ஆன்மாக்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்களை அணுகி ஆறுதலையும், ஆதரவையும் நட்புறவையும் வெளிப்படுத்துங்கள்.

இழப்பிலிருந்தும் அதன் பாதிப்புக்களில் இருந்தும் வெளியே வருவதற்குப் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு உணர்வு ரீதியான ஆதரவையும், சட்ட வழிகாட்டல்கள் மற்றும் சாத்தியமான உதவிகள் மூலம் அனைத்து வழிகளிலும் உதவி வழங்குங்கள்.

செய்த தவற்றுக்குப் பரிகாரம் தேடி, அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதன் மூலம் நாங்கள் பிராயச்சித்தம் தேடுவோம்.

கட்டாய தகனக் கொள்கை பின்னர் மாற்றப்பட்டாலும், துயரங்கள் மாறாமலேயே இருக்கின்றன. ஒரு தேசமாக, இந்த அநீதியை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும், இதுபோன்ற மீறல்கள் மீண்டும் ஒருபோதும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும், மேலும் இரக்கத்துடனும் ஒற்றுமையுடனும் ஒன்றாய் இணைந்து நிற்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூரவும், அவர்களது குடும்பங்களுக்குத் துணை நிற்கவும், ஒவ்வொரு தனிநபரினதும் கண்ணியம் வாழ்விலும் மரணத்திலும் மதிக்கப்படுகின்ற எதிர்காலத்தை உறுதியளிக்கவும் நல்லெண்ணம் கொண்ட அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

ஒரு தேசமாக நாம் இன, மத மற்றும் மொழிப் பன்மைத்துவத்தைக் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு இலங்கையரும் ஒவ்வொரு குடிமகனின் கண்ணியத்தையும் மத நம்பிக்கைகளையும் பாதுகாக்க உறுதி பூண வேண்டும்.

இந்நிலையில், கொழும்பு 6இல் உள்ள மரைன் கிராண்ட் மண்டபத்தில் பல இனங்களினதும் சங்கமத்துடன், ஒரு நினைவு நிகழ்வு ஏப்ரல் 6ஆம் திகதி காலை 10 மணிக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



நேப்பிடா:





# மியன்மார் நிலநடுக்கம்: “பேரழிவின் உச்சம்”

மியன்மாரில் சக்திவாய்ந்த தொடர் நிலநடுக்கங்களால் மியன்மார் கட்டிடங்கள் சீட்டுக் கட்டுகளைப் போல சரிந்து விழுந்தன; வீடுகள் மண்ணோடு மண்ணாகப் புதையுண்டு போயின. தற்போதைய நிலையில் மியன்மார் நாட்டின் நிலநடுக்க பலி எண்ணிக்கை 2,000த்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது; 3,400க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் இந்த கோர நிலநடுக்கத்தின் பலி எண்ணிக்கை அதிகபட்சமாக 10,000த்தை எட்டி விடும் என வல்லுநர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மியன்மார் இராணுவ நிர்வாகத்தின் சமீபத்திய செய்திக் குறிப்பில், ‘நிலநடுக்கத்தால் இதுவரை 1,644 பேர் உயிரிழந்துள்ளனர். 3,400க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து பல்வேறு மருத்துவமனைகள், மருத்துவ முகாம்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 139 பேரை இதுவரை காணவில்லை’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மியன்மார் சமூக ஆர்வலர்கள் அளித்த தகவல்களின் பேரில், சர்வதேச ஊடகங்கள், நிலநடுக்க பாதிப்பு குறித்த செய்திகளை வெளியிட்டுள்ளன. இராணுவ ஆட்சி நடைபெறுவதால் மியான்மர் நாட்டின் நிலநடுக்க பாதிப்புகள் குறித்த முழுமையான தகவல்கள் வெளியாகவில்லை. எங்களது கணிப்பின்படி, மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 10,000 பேர் வரை உயிரிழந்திருக்க வாய்ப்பு உள்ளது. ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்திருக்கக்கூடும். சுமார் 2 கோடிக்கும் மேற்பட்டோருக்கு நிவாரண உதவி தேவைப்படுகிறது.

தற்போது இராணுவ ஆட்சி நடைபெறும் பகுதிகளுக்கு மட்டுமே சர்வதேச மீட்பு படை வீரர்கள் சென்றுள்ளனர். ‘அரக்கான்’ படையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு யாரும் செல்ல முடியாது. அந்த படையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நிலநடுக்க பாதிப்புகள் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை’ என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதேபோல், ஆயிரக்கணக்கான மக்கள் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என மியன்மாரில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் அதிகாரிகள், பணியாளர்கள் கருதுகின்றனர். பல இடங்களில் சாலைகள் சேதம் அடைந்ததாலும், தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டதாலும் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்க முடியாமல் மியன்மார் இராணுவ நிர்வாகம் திணறி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, மியன்மாரில் நிலநடுக்கத்தால் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கான போதுமான மருந்துகள் அங்கு இல்லாததால் பாதிப்பு மிகவும் மோசமடையக் கூடும் என ஐ.நா. அச்சம் தெரிவித்துள்ளது.

இந்தப் பின்னணியில், மியன்மாரில் பூகம்ப பலி எண்ணிக்கை மென்மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

### தாய்லாந்து நிலை என்ன?

மியன்மாரின் அண்டை நாடான தாய்லாந்திலும் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதில், தலைநகர் பேங்கொக்கில் புதிதாகக் கட்டப்பட்ட 30 மாடிக் கட்டிடம் இடிந்து நொறுங்கியது. பேங்கொக் உட்பட 10 பகுதிகள் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 2,000க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. தாய்லாந்தில் இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளனர். 83 பேரைக் காணவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, மியன்மாரில் (பர்மா) மோனிவா நகருக்கு அருகே வெள்ளிக்கிழமை (28) காலை 11.50 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அலகில் 7.7 ஆக பதிவானது. அடுத்த 10 நிமிடங்களில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அலகில் 6.8 ஆக பதிவானது. பூமிக்கு அடியில் 10 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. மியன்மார் தலைநகர் நேப்பிடா, சாகைங், மண்டலை, பைகோ, மாகுவே, ஷான் ஆகிய 6 மாகாணங்கள் நிலநடுக்கத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளன. இந்த 6 மாகாணங்களில் அவசர நிலை அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

மியன்மாரில் தற்போது இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. இராணுவ ஆட்சிக்கு எதிராக ‘அரக்கான்’ படை என்ற கிளர்ச்சிப் படை ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. தற்போதைய சூழலில் மியன்மாரின் 50 சதவீத பகுதிகள் மட்டுமே இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 50 சதவீத பகுதிகளை ‘அரக்கான்’ படை நிர்வகித்து வருகிறது. இருதரப்பும் இடையே தீவிரமாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளே நிலநடுக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. பொதுவாக மியன்மாரின் இராணுவ நிர்வாகம், வெளிநாடுகளின் உதவியைக் கோருவது கிடையாது. நிலநடுக்க பாதிப்பு அளவுக்கு அதிகமாக இருப்பதால் முதன்முறையாக மியன்மார் இராணுவ தலைமை தளபதி மின் ஆங் ஹலாங், சர்வதேச நாடுகளிடம் பகிரங்கமாக உதவி கோரி உள்ளது குறிப்பிடத்தக்கது.

மியன்மாரின் மண்டலேயில் பல கட்டிடங்கள் சரிந்துள்ளன. சகாயிங் முதல் இராவதி நதி வரை கட்டப்பட்ட சுமார் 100 ஆண்டுகள் பழைமையான அவா பாலம் தண்ணீரில் இடிந்து விழுந்தது. அந்தளவுக்குப் பாதிப்புகள் மோசமாக இருந்தது.


மியன்மாரில் வரலாறு காணாத அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், அங்குள்ள இராணுவ ஆட்சியாளர்கள் சர்வதேச சமூகத்தினரிடம் உதவி கோரியுள்ளனர். எந்த நாட்டில் இருந்தும் உதவியை வரவேற்பதாக அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே மியன்மார் நாட்டை நிலைகுலைய வைத்த இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரான ஆங் சாங் சூச்சி உள்ளிட்டோர் அடைக்கப்பட்டுள்ள சிறைகளின் கதி என்ன என்பது உறுதியாகத் தெரியாத நிலை இருப்பதாக ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், மியனமார் நாட்டு இராணுவத்தால் சிறை வைக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சாங் சூச்சி உள்ளிட்டோர் கதி என்ன என்பது குறித்து கேள்விகள் எழுந்துள்ளன.

2021ஆம் ஆண்டு சூச்சியின் ஆட்சியைக் கவிழ்த்து, அவரை கைது செய்தது மியன்மார் இராணுவம். 2 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்ட சூச்சி, வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் மீண்டும் நேப்பிட்டோவில் உள்ள சிறைக்கு மாற்றப்பட்டார். நிலநடுக்கம் கோரத்தாண்டவமாடிய இடத்தில் இருந்து நேப்பிட்டோ 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

(நன்றி தி இந்து)



மியன்மார்

மியன்மாரில் நிலநடுக்கம்: பலி எண்ணிக்கை

# 2,000ஐ கடந்தது

மியான்மரை உலுக்கிய நிலநடுக்கத்துக்கு பலியானோரின் எண்ணிக்கை 2,000ஐ கடந்துள்ளது.

மியன்மார், தாய்லாந்து ஆகிய நாடுகளில், வெள்ளிக்கிழமை (28) அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.7 மற்றும் 6.4 ஆக பதிவான நிலையில், நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் இடிந்து விழுந்து பெரும் சேதம் ஏற்பட்டது.

அடுத்தடுத்து தாக்கிய நிலநடுக்கங்களால், மியன்மாரில் பல நகரங்களில் வானுயர கட்டிடங்கள் சீட்டு கட்டுப்போல் சரிந்து, தரைமட்டமாகின. சாலைகள் பெயர்ந்தன. பாலங்கள் இடிந்தன. அதோடு இந்த நிலநடுக்கத்தால் மியன்மாரின் மிகப்பெரிய அணையும் உடைந்தது. நிலநடுக்கத்தால் நேபிடாவ், மண்டலே ஆகிய 2 நகரும் பெரும் சேதத்தைச் சந்தித்தன.

நேபிடாவில் புத்தர் கோவில் உள்பட வரலாற்று சிறப்பு மிக்க கட்டிடங்கள் இடிந்து சேதமடைந்தன. அதேபோல மண்டலே நகரில் உள்ள பழமையான அரண்மனையும் இடிந்தது. நிலநடுக்கத்தால் தரைமட்டமான கட்டிடங்களில் இடிபாடுகளில் சிக்கி ஏராளமானோர் பலியாகினர். படுகாயம் அடைந்தனர்.

ஒட்டு மொத்த நாட்டையும் நிலநடுக்கம் உலுக்கியதைத் தொடர்ந்து மியன்மார் இராணுவ அரசாங்கம் நாடு முழுவதும் அவசர நிலையை பிரகடனப்படுத்தியது.

அத்தோடு, நிலநடுக்கம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகளை அரசு முடுக்கிவிட்டது. எனினும் ராணுவம்-கிளர்ச்சி குழுக்கள் இடையேயான மோதல் மீட்பு மற்றும் நிவாரண முயற்சிகளை சிக்கலாக்கி இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இதனிடையே, மியன்மாரை புரட்டிப்போட்ட இந்த பயங்கர நிலநடுக்கம் அதன் அண்டை நாடுகளில் ஒன்றான தாய்லாந்திலும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியது.

தலைநகர் பாங்காக் உட்பட தாய்லாந்தின் பல நகரங்களை நிலநடுக்கம் தாக்கியது. அங்கும் வானுயர கட்டிடங்கள் உட்பட ஏராளமான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. கட்டிட இடிபாடுகளில் சிக்கி பலர் உயிரிழந்தனர். ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர்.

தாய்லாந்திலும் நிலநடுக்கம் பாதித்த அனைத்து பகுதிகளிலும் முழு வீச்சில் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், மியன்மார் மற்றும் தாய்லாந்தில் நிலநடுக்கத்துக்கு 150க்கும் மேற்பட்டோர் பலியானதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகி இருந்தன.


தற்போது மியன்மாரில் மட்டுமே பலி எண்ணிக்கை 2,000ஐ கடந்துவிட்டதாகத் தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேலும், கட்டிட இடிபாடுகளில் சிக்கி 2,300க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நிலநடுக்கத்தால் மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ள மியன்மாருக்கு உலக நாடுகள் ஆதரவு கரம் நீட்டி வருகின்றன. இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளும் நிவாரண பொருட்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவை மியன்மாருக்கு அனுப்பி உள்ளன.

இதனிடையே, மியன்மாரில் சனிக்கிழமை (29) பகல் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. தலைநகர் நேபிடாவை மையமாகக் கொண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.1 புள்ளிகளாக பதிவானது. சில வினாடிகளுக்கு நீடித்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் குலுங்கின. எனினும் புதிய நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து உடனடி தகவல் வெளியாகவில்லை.

அடுத்தடுத்து தாக்கும் நிலநடுக்கங்களால் மியன்மார் மக்கள் கடும் அச்சத்தில் உள்ளனர்.

இந்நிலையில் மியன்மாரில் நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் தற்போது 3ஆவது நாளாகவும் மீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன.




இந்தோனேசியா

## இந்தோனேசியாவிலும் நிலநடுக்கம்

இந்தோனேசியாவில், ஞாயிற்றுக்கிழமை (30) காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்நாட்டின் வடக்கு சுமத்ராவில் காலை 8.28 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டதாக, அமெரிக்க நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.4ஆக பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தை உணர்ந்ததும் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

மியன்மாரில் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், இந்தோனேசியாவில் ஞாயிற்றுக்கிழமை(30) ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இஸ்ரேல்

தற்காலிக போர் நிறுத்தத்துக்கு

## ஒப்புக்கொண்ட ஹமாஸ்



இஸ்ரேலுடனான போரைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஹமாஸ் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

மேலும், ஐந்து பணயக் கைதிகளை விடுவிப்பதாகவும் ஹமாஸ் தெரிவித்து இருக்கிறது. இந்த முறை சரியாக 50 நாட்கள் போர் நிறுத்தம் அமுலில் இருக்கும்.

ரமலான் முடிவைக் குறிக்கும் ஈத், சனிக்கிழமை(29) இரவு தொடங்கி புதன்கிழமை(2) முடிவடைகிறது.

ஹமாஸ் தலைவர் கலீல் அல்-ஹயா, ஒரு தொலைக்காட்சி அறிக்கையின் போது, குழுவின் 'நேர்மறையான' பதிலையும் அதைத் தொடர்ந்து இந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டதையும் உறுதிப்படுத்தினார் என சி.என்.என். செய்தி வெளியிட்டுள்ளது.

ஹமாஸ் ஆரம்ப போர் நிறுத்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளை "முழுமையாகக் கடைப்பிடித்துள்ளது" என்றும், இஸ்ரேல் "இந்த திட்டத்தைத் தடுக்காது" என்று நம்பிக்கை தெரிவித்ததாகவும் அல்-ஹயா கூறினார்.

எகிப்து அறிவித்த போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் ஒரு எதிர் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளதாக, இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

உத்தரப்பிரதேசம்

# நடுவானில் உயிரிழந்த பயணி




உத்தரப்பிரதேசத்தில், நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் உயிரிழந்தார்.

பீகார் மாநிலம் பாட்னாவில் இருந்து, சனிக்கிழமை (29), இந்தியத் தலைநகர் டெல்லிக்கு இண்டிகோ விமானம் சென்றுகொண்டிருந்தது. விமானத்தில் 50க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்துள்ளனர்.

உத்தரப்பிரதேசத்தின் லக்னோ வான்பரப்பில் பறந்துகொண்டிருந்தபோது, விமானத்தில் பயணித்த சதீஷ் சந்திர பர்மன் (வயது 63) என்ற பயணிக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இதையடுத்து, அவர் நடுவானில் விமானத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது குறித்து உடனடியாக விமானிக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, விமானம் லக்னோ விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது. பின்னர், உயிரிழந்த பயணியின் சடலம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடுவானில் விமானத்தில் பயணி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட போட்டிகளுக்கு

# ஸ்டோக்ஸை அணித் தலைவராக முன்மொழியும் மோர்கன்




மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட போட்டிகளுக்கான புதிய தலைமைத்துவத்தில் இங்கிலாந்து புதியதொரு வழியை தேர்ந்தெடுத்து டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸை முக்கிய தொடர்களில் அணித்தலைமைப் பொறுப்பை வழங்கலாமென இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் ஒய்ன் மோர்கன் தெரிவித்துள்ளார்.

ஸ்டோக்ஸின் உப அணித்தலைவர் பெரும்பாலான இரு தரப்புத் தொடர்களுக்கு தலைமை தாங்கலாமென்றும், உலகக் கிண்ணங்களுக்கு ஸ்டோக்ஸ் தலைமை தாங்கலாமெனவும் மோர்கன் கூறியுள்ளார்.

முன்னதாக ஸ்டோக்ஸை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான தலைமைத்துவத்திற்கு கருத்திற் கொள்ளாமல் விடுவது முட்டாள்தனமெனக் கூறியுள்ளார்.

கடந்த 2023ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரைத் தொடர்ந்து இங்கிலாந்துக்காக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் ஸ்டோக்ஸ் விளையாடவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இங்கிலாந்தின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண போட்டிகளுக்கான் அணித்தலைமைப் போட்டியிலிருந்து முன்னாள் அணித்தலைவர் ஜோ றூட் ஏற்கெனவே விலகியுள்ளார்.

Tamil Union Cricket and Athletic Club

## 125 வருட பூர்த்தியை கொண்டாடுகிறது







இலங்கையின் பழைமையான மற்றும் பெருமைக்குரிய விளையாட்டு கழகங்களில் ஒன்றான தமிழ் யூனியன் கிரிக்கட் மற்றும் மெய்வல்லுனர் கழகம், தனது 125 வருட பூர்த்தியை கொண்டாடுகிறது.

1899 டிசெம்பர் 2ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட இந்தக் கழகம், தமது 125 வருட பூர்த்தியை முன்னிட்டு மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் பற்றி அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை பி.சரவணமுத்து மைதான அரங்கில், வியாழக்கிழமை (28) நடத்தியது.

விசேட வருட பூர்த்தி இலச்சினையையும் ஏற்பாட்டாளர்கள் வெளியிட்டிருந்ததுடன், இலங்கை கிரிக்கட் மற்றும் விளையாட்டு துறைக்கு ஆற்றியுள்ள பெருவாரியான பங்களிப்புகளை குறிக்கும் விசேட நிகழ்வுகள் பற்றிய அறிவிப்புகளையும் வெளியிட்டிருந்தது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கழகம், நாட்டின் விளையாட்டுத் துறையின்அபிவிருத்தியில் முக்கிய அங்கம் பெற்றுள்ளதுடன், வருடம் முழுவதிலும் பல்வேறு போட்டித் தொடர்கள், பாரம்பரிய கண்காட்சிகள் மற்றும் சமூக சென்றடைவு நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்யும். இந்த நிகழ்வுகள் கடந்த கால மற்றும் தற்கால அங்கத்தவர்கள், கிரிக்கெட் போட்டியாளர்கள் மற்றும் இதர பரந்த சமூகங்களைச் சேர்ந்தவர்களை ஒன்றிணைத்து, கழகத்தின் சாதனை மிகுந்த வரலாற்றை கொண்டாடும்.

கிரிக்கட்டுக்கு அப்பால், தமிழ் யூனியனினால் பரந்தளவு விளையாட்டு வசதிகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் நீச்சல், பூப்பந்தாட்டம், ஸ்கொஷ், டெனிஸ் மற்றும் சகல வசதிகளையும் கொண்ட ஜிம்னாசியம் ஆகியன அடங்கியுள்ளன. பெண்கள் கிரிக்கட்டுக்கான ஸ்ரீலங்கா கிரிக்கட்டின் நிலையமாகவும் கழகம் திகழ்வதுடன், தேசிய மகளிர் அணிக்கு அவசியமான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குகிறது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# சமநிலையில் அத்லெட்டிகோ – அஸ்பன்யோல் போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், அஸ்பன்யோலின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் சமப்படுத்தியது.

அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை சீஸர் அத்பிலிகெட்டா பெற்றதோடு, அஸ்பன்யோல் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜவி புவாடோ பெற்றிருந்தார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் தலா 63 புள்ளிகளுடன் பார்சிலோனாவும், நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட்டும் உள்ளபோதும் அவற்றுக்கிடையேயான போட்டி முடிவுகளின்படி முதலாமிடத்தில் பார்சிலோனாவும், இரண்டாமிடத்தில் றியல் மட்ரிட்டுமுள்ளன. 57 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 52 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவோவுமுள்ளன. இதில் பார்சிலோனாவும், பில்பாவோவும் மற்றைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.







# றியல் மட்ரிட் செல்லும் பெர்ணாண்டஸ்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் அணித்தலைவரான புரூனோ பெர்ணாண்டஸைக் கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் எதிர்பார்த்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தமது அணித்தலைவர் லூகா மோட்ரிச்சுக்கான பிரதியீடாக மத்தியகளவீரரான பெர்ணாண்டஸை றியல் மட்ரிட் நோக்குவதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளன உலகக் கிண்ணத் தொடரைத் தொடர்ந்து றியல் மட்ரிட்டை விட்டு மத்தியகளவீரான மோட்ரிச் வெளியேறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

யுனைட்டெட்டுடன் 2027ஆம் ஆண்டு வரையும், அதை ஓராண்டால் நீடிக்கக்கூடிய ஒப்பந்தத்தில் 30 வயதான பெர்ணாண்டஸ் உள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 31, மார்ச் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.